2005 மார்ச் 28]

முற்பகல் 10–30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற, விளிம்புத் தொகைத் திட்டம் என்பது வால்பாறை தொகுதிக்கு மட்டுமல்ல. இந்தக் கடனைப் பெறுவதற்கு சில தகுதிகள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் மும்பை கதர் வாரியம். கதர் ஆணைக் குழு என்பது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. தனி நபரான கைவினைஞர் அல்லது தொழில் முனைவோர் அல்லது நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், கூட்டமைப்புகள், அறக்கட்டளைகள், சுய உதவிக் குழுக்கள் இதுபோன்ற கூட்டமைப்பு சேர்ந்து கடன் பெறுவதற்கு முயற்சி செய்கிறபோது கண்டிப்பாக வங்கிகள் சொல்லக்கூடிய தகுதியின் அடிப்படையிலும், நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியம் சொல்லுகின்ற தகுதியின் அடிப்படையிலும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதைத்தான் நான் ஏற்கெனவே, முன்னாலேயே குறிப்பிட்டேன்; எவ்வளவு தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதிகப்படுத்துவதற்கு நீங்கள்தான் முயற்சி செய்ய வேண்டும். மத்தியிலே இருக்கிற நிதி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி இந்த விளிம்புத் தொகையை வால்பாறைக்கு மட்டுமல்ல 234 தொகுதிகளுக்கும் விடுவிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 210, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

210—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***49875—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மாட்டுத்தாவணி அருகில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 28

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு மாட்டுத்தாவணி அருகில் சொந்தக் கட்டடம் கட்ட தல்லாகுளம் கிராமம் 4—ல் எண் 134/2 ஏ 1—ல் 3.57 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருவள்ளுவர் பணிமனையில் இயங்கி வருவதால் மாட்டுத்தாவணி அருகில் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்து, நிலமாற்றம் செய்ததற்கு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மதுரை மாவட்ட மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற நிதி ஆண்டில் இக்கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு அடுத்த ஆண்டில் முடிக்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மதுரை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அரசு சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. அந்தச் சூழ்நிலையினைக் கருத்தில்கொண்டு வருகின்ற ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி.பி. பொன்னம்பலம்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இரண்டாவது இடமான மதுரை மாவட்டம், அனைத்து அலுவலகங்களும் நிறைவுபெற்று இருப்பதால், வட்டாரப் போக்குவரத்துக் கழகம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டாக்குகிறது மக்களுக்கு. ஆகவே, வருகின்ற நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி நகராகத் திகழ்கின்ற திருப்பூர் நகரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டும் என்பதற்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடத்தை கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு இலவசமாக போக்குவரத்துத் துறைக்கு வழங்கி இருக்கின்றோம். வருகின்ற நிதியாண்டில் அந்த இடத்தில் புதிதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு, வருகின்ற போக்குவரத்து மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு பதிலை அளிப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, அவருடைய அறிவுரையைப் பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து, அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம் பகுதியில் இருக்கக்கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இப்போது புதிய norms–ன்படி குறைந்தபட்சம் 3 ஏக்கர் இடம் இருந்தால் அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான கட்டடம் கட்டப்படும் என்று உத்தரவு இருக்கிறது. அதுசம்பந்தமாக எங்களுடைய நல்லூர் பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலம்—மிக மேடும், பள்ளமுமாக இருந்ததை நாங்கள் 2,3 இலட்சம் ரூபாய் செலவு செய்து, சம நிலப் பரப்பாக்கியுள்ளோம்——அந்த இடத்திலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு சென்றிருந்தோம். பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், அங்கேயுள்ள அதிகாரிகள் தூரமாகச் சென்று டீ குடிக்க வேண்டும், காபி குடிக்க வேண்டும், அதனாலே அந்த இடம் சரியாக வராது என்று காரணம் சொல்லி வருவதாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே, ஒரு கிராமப்புறத்தினுடைய வளர்ச்சியைக் கருத்திலே கொண்டும், 3 ஏக்கர் இடத்திலே அமைப்பதற்கானச் சாத்தியக்கூறு இருக்கிற காரணத்தினாலே, அதுவும் குறிப்பாக அம்மாவினுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதியிலே நல்ல ஒரு ஸ்தாபனம் வந்தது என்கிற ஒரு நிலையான பெயர் பெறுகின்றவிதத்திலும், அதைக் கருத்திலேகொண்டு, நல்லூர் பகுதியிலே அந்த வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி, அந்த இடம் தகுதியானதுதானா, அலுவலகம் அமைப்பதற்கு போதுமானதா என்பதை அதிகாரிகளைக் கொண்ட குழுவை வைத்து ஆய்வு செய்து, அப்படி அந்த நிலம் போதுமானது என்று கருதினால், அந்த இடத்திலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்காக அரசு அந்த இடத்தை எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால், கட்டடம் கட்டுவதற்கு — நிதி ஆதாரத்தைப் பொறுத்து, நிதிநிலைமையைப் பொறுத்து அங்கே புதிய கட்டடம் கட்டுகின்ற பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத் தலைநகராக இருக்கிறது. ஈரோடு நகரத்தில் இருக்கின்ற ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்தில், ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிதாக இடம் தேர்வு செய்து, புதிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பல கேள்விகளுக்குச் சொன்ன பதில் போல, இதற்கும் அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.டி. பச்சைமால்.

திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் இயங்கி வருகிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் பல ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதுவும் ஆண்டுக்கு ஒரு முறை பல்வேறு பகுதிகளிலே அது மாற்றியமைக்கப்படுவதால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, எனது தொகுதிக்கு உட்பட்ட இராஜாக்கமங்கலம் பகுதியில் சுமார் 300 ஏக்கருக்கும் மேல் அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. அதில்கூட மத்திய விளையாட்டு ஆணையத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சுமார் 59 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளார்கள். எனவே, அந்தப் புறம்போக்கு நிலத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பு வாடகைக் கட்டடத்திலே இயங்குகிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டுமா என்று உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறேன். இனிமேல் இதுசம்பந்தமாக கேள்விகள் யார் கேட்டாலும் இதே பதில் அதற்கும் பொருந்தும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 211, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

211—

பாலம் கட்டுதல்

***48598—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா கல்லம்பாளையம் அருகே மோயாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS